**தலைப்பு 194 - தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 194 - தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள்அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 16 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காகஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,577.17 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றுள் ரூபா995.71 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம்,அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா581.46மில்லியன் அதாவது 36.87சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபாமில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 133.31 | 130.63 | 2.68 | 2.01 |
| மூலதனம் | 1,443.86 | 865.08 | 578.78 | 40.09 |
| மொத்தம் | 1,577.17 | 995.71 | 581.46 | 36.87 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 19401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்தஎல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 3.00 | 2.05 | 0.50 | 1.57 | 7.50 | 5.30 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7002/0000/00/0419/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 0.0072 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள 02 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.27 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0113/000 | 0.19 |
| 6000/0000/00/0013/0110/000 | 0.08 |
| **மொத்தம்** | **0.27** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின்2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.1.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாகனக் கொள்வனவுக்காக ரூபா 105 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தபோதும் அதில் ரூபா 104.95 மில்லியன் மீதமாக இருந்ததுடன் அம்மீதி நிதிஏற்பாட்டில் 99.95 சதவீதமாகும். வாகன கொள்வனவின் பிரமாணம் மற்றும் அவசியத்தன்மை அடிக்கடி திருத்தங்களுக்கு உள்ளாகுதல் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் வருட இறுதியில் இடம்பெறல் போன்றன இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது.

(ஆ) செலவு விடயம் 18 இற்காக மேலதிக நிதியேற்பாடு ஒதுக்கியதன் காரணமாக அந்த நிதியேற்பாட்டை உபயோகப்படுத்தியதன் பின்னர் மீதி, அந்த செலவு விடயத்தின் உரித்தான தேறிய நிதியேற்பாட்டின் 06 தொடக்கம் 92 சதவீதத்திலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) திட்டமிட்டதன்படி அமுல்படுத்தாமையால் 04 செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் கீழ் பெறுமானமடைந்திருந்தது. அதன் காரணமாக அதற்காக வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 23 இலிருந்து 55 வரையான சதவீதம் அப்படியென்றால் ரூபா 469,124,114 எஞ்சியிருந்தது.

**3.2 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

**சேமிப்பை விஞ்சி பொறுப்புக்களுக்கு உடன்படல்**

நிதிப்பிரமாணம் 94(2) ஏற்பாடுகளின் பிரகாரம், இடமளித்திருந்த வரையைறையை விஞ்சி செலவு விடயம் 11 இற்காக ரூபா 1,999,889 தொகையான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

2016 ஆம் வருடத்திற்குள்ளே அமைச்சிற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்காமையால் உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

**3.4 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**3.4.1 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

**(அ) பாடசாலை கணனி ஆய்வுகூட செயற்திட்டம்**

2016 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பாடசாலை கணனி ஆய்வுகூட செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 250 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தபோதும் மீளாய்வாண்டின் போது திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 146.37 மில்லியன் மாத்திரம் உபயோகிக்கப்பட்டிருந்தது. அதன்படி இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் ரூபா 103.63 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் 41.45 சதவீதமாகும்.

(ii) செயற்திட்டத்தின் கட்டம் I இன் கீழ் தற்போது நடைமுறையிலுள்ள 45 பாடசாலை கணனி ஆய்வுகூடத்திற்காக கணனி உபபாகங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின்போது திசெம்பர் 31 ஆந் திகதியில் 38 பாடசாலை கணனி ஆய்வுகூடங்களுக்கு மாத்திரம் அவசியமான அனைத்து கணனிகளும் மற்றும் கணனி உபபாகங்களும் வழங்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 06 பாடசாலை கணனி ஆய்வுகூடங்களுக்கு சில கணனி உபபாகங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) 2016 ஆம் ஆண்டிற்குள் கட்டம் II இன் கீழ் புதிய கணனி ஆய்வுகூடங்களும் மற்றும் 59 புதிய தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழில்நுட்ப மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டிருப்பினும் தாபிப்பதற்கு எதிர்பார்த்த அளவு எவ்வளவு என்பதை திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 2016 ஆம் ஆண்டிற்குள் தாபிக்கப்பட்ட 59 கணனி ஆய்வுகூடங்களில் 30 பதுளை மாவட்டத்திற்கே வழங்கப்பட்டுள்ளமையால் வளங்களை பகிர்ந்தளிப்பதில் முறைகேடாக உள்ளது.

(v) தாபிக்கப்படுகின்ற கணனி ஆய்வுகூடங்களுக்காக 2016 ஆம் ஆண்டில் 500 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் 432 ஆசிரியர்களுக்கு மாத்திரமே பயிற்சியளிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மாவட்ட தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையம்**

2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மாவட்ட தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் 25 மாவட்ட தகவல் நிலையங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் சம்பந்தமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஆம் ஆண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 06 கணனி தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையங்கள் தாபிக்க திட்டமிடப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் எவ்வித தகவல் மத்திய நிலையங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இடம்பெறும் அம்பாறை, களுத்துறை, புத்தளம், காலி, மாத்தறை, கேகாலை, வவுனியா மற்றும் பதுளை ஆகிய இடங்களில் 08 மாவட்ட தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையங்களை தாபிப்பதற்கு மீளாய்வாண்டிலே ரூபா 19,020,732 பெறுமதியான கணனி மற்றும் வேறு உபகரணங்களுக்காக வழங்கப்பட்டிருந்தது. எனினும், கேகாலை, காலி, பதுளை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்ட தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையங்களின் செயலந்டவடிக்கை நிலைமைகள் கணக்காய்வு தினமான 2017 மே 05 ஆந் திகதியிலும் நடைபெறவில்லை. வவுனியா, அம்பாறை, புத்தளம் மற்றும் களுத்துறை தகவல் மத்திய நிலையங்களின் முன்னேற்றம் சம்பந்தமான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான புரிந்துணர்வை மாவட்ட செயலாளருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

**(இ) தகவல் தொழில்நுட்ப பூங்கா நிர்மாணம்**

பிரதேச மக்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் நிர்மாணித்துள்ள தகவல் தொழில்நுட்ப பூங்காவுக்காக வருடாந்த மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளுக்காக அமைச்சினால் குறித்த மாவட்ட செயலாளர் காரியாலயத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i) யாழ்ப்பாண தகவல் தொழில்நுட்ப பூங்கா**

- 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இந்த தொழில்நுட்ப பூங்காவிற்காக ரூபா 27.98 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 953,489 வருமானமாக பெறப்பட்டுள்ளது. செலவுக்கு நிகரான வருமானம் 3.4 சதவீதமாகும்.

- மீளாய்வாண்டிற்காக 13 பாடக் கோப்புக்களுக்காக 245 மாணவர்களை பயிற்றுவிப்பதற்கு திட்டமிட்டிருந்தாலும் இரண்டு பாடக் கோப்புக்களுக்கு 81 மாணவர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர். இன்னும் 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டிற்காக 525 பேருக்கு மாத்திரம் கணனி பயற்சி பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது.

**(ii) மன்னார் தகவல் தொழில்நுட்பப் பூங்கா**

2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இந்த தொழில்நுட்ப பூங்காவிற்காக ரூபா 17.7 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் 868 பேருக்கு கணனி பயிற்சி பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் இந்த கால கட்டத்தில் ரூபா 3,127,774 வருமானம் பெறப்பட்டுள்ளதுடன் அது செலவுக்கு நிகராக 17.68 சதவீதமாகும்.

**(ஈ) இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழில்நுட்ப முகவர் நிறுவனம்**

(i) நிர்மாணித்தல்

- இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் இலங்கை அரசிற்கு முழுமையாக சொந்தமான கம்பனியாக 05 வருட காலத்திற்காக 2003 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழில்நுட்ப சட்டத்தின் கீழ் 2003 மே 18 ஆந் திகதி நிர்மாணிக்கப்பட்டது. 2003 யூலை மாதம் 16 ஆந் திகதி நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் சம்பந்தமாக அமைச்சரவை தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்ததுடன் அதனூடாக கம்பனிக்கு பூரணமான சுதந்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 05 வருட காலம் முடிவடைந்ததன் பின்னர் நிறுவனத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுவதற்கு 2008 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க தகவல் மற்றும் தொலைத் தொடர்புகள் தொழில்நுட்ப (திருத்தம்) சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் மேற்கூறப்பட்ட தீர்மானம் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

- ஆரம்ப காலத்தில் “E SRILANKA PROJECT” உலக வங்கி கொரிய EXIM வங்கி மற்றும் ஏனைய அபிவிருத்தி உதவி நிறுவனங்கள் சிலவற்றின் நிதி வழங்கலின் மூலம் செயற்பட்டாலும் தற்காலத்தில் முழுமையாக அரச நிதியினால் செயற்படுகின்றது. எனினும், இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் அமப/03/0884/134/027 மற்றும் 2003 யூலை 09 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் படி 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையுமாக பூரணமான சுதந்திரத்துடன் செயற்படுவதுடன் அரசின் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

- 2003 யூன் 02 ஆந் திகதி 12 ஆம் இலக்க அரச வியாபார சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அப்பால் முகவர் நிறுவனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் இல்லாமல்மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதி முகவர் நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதிப்பிரிவு உள்ளடங்கலாக அனைத்து உத்தியோகத்தர்கள், ஆலோசகர்கள் மற்றும் சேவைகளுக்காக 187 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

- 2003 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொலைத் தொடர்புகள் தொழில்நுட்பச் சட்டம் மற்றும் 2008 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் படி நிர்மாணித்திருக்க வேண்டிய அமைச்சுகளுக்கிடையிலான குழு 12 வருடங்கள் தாமதமாக்கிய பின்னர் 2015 ஒக்டோபர் 16 ஆந் திகதி நிர்மாணிக்கப்பட்டது.

**(ii) செயலாற்றல்**

- முகவர் நிறுவனத்தினூடாக 2016 ஆம் ஆண்டில் 55 செயற்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அதற்காக பெற்றுக் கொடுத்த நிதி ஏற்பாடு ரூபா 963 மில்லியன் ஆகும். இந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட தொகை ரூபா 651 மில்லியன் ஆகும். இந்த செலவிற்குள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளச் செலவு ரூபா 210,811,111 ஆக இருப்பதுடன் இது செயற்திட்டச் செலவின் 32 சதவீதமாகும். அப்படி இருக்கும் போது 2016 ஆம் ஆண்டிற்கான முகவர் நிறுவனத்தின் நிதிக்கூற்று 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதியிலும் முன்வைக்கப்படாததன் காரணமாக உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த சம்பூரணமான கொடுப்பனவுகள் எவ்வளவு என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை.

- இந்த செயற்திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றம் குறிப்பிட்ட அளவு கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன் ஈ ஸ்வாபிமானி பெயருடைய தேசிய விருதுகள் விழா மாத்திரம் நூற்றுக்கு நூறு செயல்முன்னேற்றம் அடைந்திருந்தது. எஞ்சிய செயற்திட்டம் 54 இல் 07 செயற்திட்டங்கள் நூற்றுக்கு 61 - 96 வரையான செயல்முன்னேற்றத்தையும் 27 செயற்திட்டங்கள் நூற்றுக்கு 31 - 60 வரையான செயல்முன்னேற்றத்தையும் 20 செயற்திட்டங்கள் நூற்றுக்கு 0 - 30 வரையான செயல்முன்னேற்றத்தையும் அடைந்திருந்தது.

- செயற்திட்டங்களை திட்டமிட்டதற்கமைவாக நடைமுறைப்படுத்த முடியாமைக்கு தாக்கம் செலுத்தியிருந்த காரணங்களுக்கிடையில் பிரதானமாக கொள்வனவு பெறுகைகளின் நடைமுறைகளின் தாமதம் தாக்கம் செலுத்தியிருந்தது.

**3.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு**

**செயற்பாடற்ற வங்கிக் கணக்கு**

அமைச்சினால் பேணப்படுகின்ற வங்கிக் கணக்கொன்றில் ரூபா 200,500 மீதியொன்று காணப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 02 ஆண்டுகளாக இந்தக் கணக்கு செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளுக்குப் புறம்பானவைகள்**

**(அ) அமைச்சரின் வாஸஸ்தலத்தை நவீனமயப்படுத்தல்**

அரச கூட்டுத்தாபனத்தினால் இந்த நவீனமயப்படுத்தலுக்காக ரூபா 3,780,804 மதிப்பீடொன்று வழங்கப்பட்டிருந்தது.

(i) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2 மற்றும் 3.2.1 வழிகாட்டலுக்கு அமைவாக கூறுவிலைகள் கோரப்படாமல் சந்தை விலை முறைப்படி கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தது.

(ii) வாஸஸ்தலம் நவீனமயப்படுத்தலுக்காக 08 ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளக் கூடிய சாட்சிகள் இருக்கவில்லை.

(iii) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.12 வழிகாட்டலுக்கு அமைவாக தொழில்நுட்ப குழுவிற்கு நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்களின் பிரகடனத்தை (Declaration) பெற்றிருக்கவில்லை.

(ஆ) பாடசாலை கணனி ஆய்வுகூடம் மற்றும் மாவட்ட தகவல் தொழில்நுட்ப வளங்கள் மத்திய நிலைய செயற்திட்டத்திற்காக கணனி மற்றும் உபபாகங்களை கொள்வனவு கொள்வனவு செய்தல். இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 66,865,350 ஆக மிகக் குறைந்த விலையை முன்வைத்த நிறுவனம் கணனி மற்றும் ஏனைய உபபாகங்களுக்காக அனைத்து தகைமைகளையும் கொண்டிருந்தும் Scanner மற்றும் Multimedia Projectors க்காக மட்டும் 05 வருடங்கள் மற்றும் 03 வருடங்களுக்கான அனுபவம் இல்லாததன் காரணமாக நிராகரிக்கப்பட்டு அந்த நிறுவனத்தை விட ரூபா 2,502,750 மேலதிகமாக கூறுவிலைகளை முன்வைத்திருந்த நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது.

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) அரச செலவுகள் முகாமைத்துவம் சம்பந்தமான ஜனாதிபதி செயலாளரின் CA/1/17/1 மற்றும் 2010 மே 14 ஆந் திகதி சுற்றறிக்கையின் 1 பந்தியின் பிரகாரம் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களினதும் காரியாலயங்கள் முடியுமான அளவு அரசின் அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்குரிய கட்டிடங்களில் கொண்டு நடத்தப்பட வேண்டும். அப்படியிருந்தும் 2010 ஆம் ஆண்டிலிருந்து இந்த அமைச்சிற்காக தொடர்ந்தும் காலம் நீடிக்கப்பட்டு தனியார் கட்டிடமொன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த வரி வாடகை ரூபா 18,689,666 ஆகும். அரச கட்டிடத்தை பெற்றுக் கொள்வது கடினமானதால் 2010 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சு தனியார் கட்டிடமொன்றை வாடகையாக பெற்றுக்கொண்டு நடாத்துவதற்கு நேர்ந்ததாக செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 யூலை 04 ஆந் திகதி இடம்பெற்ற அரச கணக்குகள் குழுவின் கட்டளையின் படி காரியாலய கட்டிடத்திற்காக செலவான அதிக செலவினத்தை கட்டுப்படுத்துவதற்காக காரியாலய கட்டிடம் 06 மாத கால வரையறைக்குள் வேறு பொருத்தமான இடத்தில் ஸ்தாபிப்பதற்கு இணங்கியிருந்தாலும் 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வரையிலும் அந்த கட்டிடத்திலேயே காரியாலய நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 11 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 33 | 19 | 14 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 18 | 02 |
| (v) | ஏனைய (அமைய/தற்காலிக/ஒப் பந்த அடிப்படை) | 02 | 01 | 01 |
| | | 72 | 51 | 21 |